பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 15 சனிக்கிழமை 29.01.2022 கதிர் 311

## குமார வெல்கமவுக்கும் கொரோனாத் தொற்று



நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் களுத்துறை மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்குப் பிரவேசித்த உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ் நகரில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை ஆரம்பம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

நீதி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவை இன்று யாழ். மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட குறித்த நிகழ்வு

☞2

## சபாநாயகருக்கும் கொரோனா



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்குக் கொரோனா வைரஸ்தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனையின் பின்னர், சபாநாயகருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாகச் சபாநாயகருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிராக காணாமல்போனோரின் உறவுகள் போராட்டம்

## யாழ். மத்திய கல்லூரி முன் தள்ளுமுள்ளு





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி அமைச்சின் நடமாடும் செயலமர்வில் காணாமல்போனோர் விவகாரத்தைக் கையில் எடுக்கக்கூடாது எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை இன்று யாழ். மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே காணாமல்போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

☞2

## தெற்கு அதிவேக வீதி விபத்தில் இருவர் பலி

தெற்கு அதிவேக வீதியின் கடவத்தை - கடுவலை 16ஆம் தூண் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதிவேக வீதியில் பயணித்த லொறியின் டயர்கள் பழுதடைந்ததால் அதனைத் திருத்துவதற்காக வீதியோரத்தில் நிறுத்தப்பட்டது.

இதன்போது வீதியால் பயணித்த மற்றுமொரு லொறி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

விபத்தில் லொறியின் சாரதி தூக்கி எறியப்பட்டு வீதியில் விழுந்துள்ள நிலையில் லொறியின் இடது

☞2

## போராட்டங்கள் நடத்துவதன் மூலம் தீர்வைப்பெற முடியாது

### அரசுடன் பேசினால்தான் நன்மை என்கிறார் நீதி அமைச்சர்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

போராட்டங்களை நடத்துவதன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுவிட முடியாது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமாக இருந்தால் அரசுடன் பேசினால் அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

☞2

## 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வலி. மேற்கில் கவனவீர்ப்பு ஊர்வலம்!

### நாளை நல்லூரில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வாகனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக சங்கரத்தையில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்திலிருந்து ஆரம்பமாகிய பேரணி சங்கரத்தை ஊடாக அரவாணிப் பகுதிகளைச் சென்றடைந்து பின்னர் வட்டுக்கோட்டையை அடைந்து சுழிபுரம், சங்கானை போன்ற பகுதிகளில் மக்களிடையே துண்டுப் பிரசுரங்களும் கையளிக்கப்பட்டதோடு சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

☞2

## யாழ். பல்கலைக்கழகத்தில் 4 பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



பேரா. பி. குமரேந்திரன்



பேரா. என்.கெங்காதரன்



பேரா. கே.லிங்கேசியா



பேரா. ஆர். ஸ்ரீகரன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

☞2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## போராட்டங்கள் நடத்துவதன் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இன்று நீதி அமைச்சின் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீண்ட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இன்று யாழ்ப்பாணத்திலும் எமது நிகழ்வு நடக்கும் இடத்திற்கு முன்பும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

நேற்று நான் முல்லைத்தீவில் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டபோதும் நான் கலந்துகொண்ட நிகழ்வு முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் அவர்களை நான் சந்திக்க அழைத்தேன். ஆனால், அவர்கள் சந்திக்க விரும்பவில்லை என்று கூறினார்கள்.

எனவே, அதிலிருந்து ஒன்றை நான் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் போராட்டம் செய்யவே வந்திருக்கின்றார்கள். அவர்களுக்குப் பிரச்சினைக்குரிய தீர்வு தேவையில்லை. அவர்களுக்குப் போராட்டத்தின் மூலம் தீர்வு கிடைக்காது.

கடந்த 13 வருடங்களாகப் போராட்டங்களை மேற்கொண்டு அவர்களுக்கு என்னதான் கிடைத்தது? போராட்டங்களை மேற்கொள்வதன் மூலம் எதையும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக இயக்கங்களில் இருந்தவர்களின் உயிரை மீட்டுத் தருமாறு கூறினால் அதைப் பெற்றுக் கொடுக்க முடியாதுதானே? அதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும். அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆனால், நான் ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றேன். நீதி அமைச்சர் என்ற ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமானால் அது அரசுடன் பேசித்தான் அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர போராட்டங்களை மேற்கொண்டு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது

போராட்டங்களை மேற்கொள்வது அவர்களுடைய ஜனநாயக உரிமை. அதனை மதிக்கின்றேன்.அதனைத் தடுக்கமாட்டேன். ஆனால், போராட்டங்களை நடத்தி எதனையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள் – என்றார்.

## தெற்கு அதிவேக வீதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கையில் அமர்ந்திருந்த லொறியின் உரிமையாளர் லொறி தீப்பற்றி எரிந்ததில் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் சாரதியும் உதவியாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## 13ஆவது திருத்தச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் கனகரட்ணம், காண்டீபன், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதனிடையே நாளை யாழ். நல்லூரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் பொதுமக்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ நிபுணர் பி. குமரேந்திரன் சமுதாய மருத்துவத்துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவபீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என்.கெங்காதரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், நிதி முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. லிங்கேசியா நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர். ஸ்ரீகரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## நீதி அமைச்சின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாகக் கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், உறவுகளைத் திருப்பித் தா, நடமாடும் செயலமர்வில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தைக் கையில் எடுக்காதே போன்ற பல கோஷங்களை எழுப்பினார்.

இந்நிலையில், போராட்டக்காரர்கள் நிகழ்வு மண்டபத்துக்குள் செல்ல முற்படுகையில் பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் அங்கு தள்ளுமுள்ளு நிலை ஏற்பட்டதுடன் குழப்பமான நிலை ஏற்பட்டது.

காணாமல்போனோரின் உறவுகள் யாழ். மத்திய கல்லூரி முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்களைத் தன்னிடம் தருமாறு ஆளுநர் கூறியபோது அதற்கு மறுப்புத் தெரிவித்த போராட்டக்காரர்கள் பலமுறை நாங்கள் விபரங்களைக் கொடுத்துள்ளோம். இது வரை எதுவும் நடக்கவில்லை எனத் தெரிவித்தனர். இதையடுத்து ஆளுநர் அங்கிருந்து விலகிச் சென்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்தும் அங்கு கூடியிருந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## யாழ் நகரில் நீதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் நாளையும் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடமாடும் சேவையில் நீதித் துறை சார்ந்த பல்வேறு அரச திணைக்களங்களில் பொதுமக்கள் சேவை பெறும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், நீதி அமைச்சின் செயலாளர் மாயாதுன்னை, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் மற்றும் உயர் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.















# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உயிரோடு விளையாடும் கயமை

மனித மாண்புகள், விழுமியங்கள் நாட்டில் மதிப்பிழந்து போய் விட்டன போதிலும். வர்த்தகம் – வியாபாரம் –உயிரோடு விளையாடும் அற்ப விவகாரமாகியிருப்பது பற்றிய செய்தி – தகவல் அதிர்ச்சியளிக்கின்றது.

நாடு கொரோனாத் தொற்று என்ற பேரிடருக்குள் மூழ்கி மீள முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. இச்சமயத்தில் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவது மிக முக்கிய விடயமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கையினல் மிக முக்கியமானது தொற்று நீக்கிகள் கொண்டு அடிக்கடி கைகளைக் கழுவுவதாகும். தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் கொரோனோ வைரஸை உடனடியாக அழிக்கும் தொற்று நீக்கிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன.

திடீர்த் தொற்றுப் பரவலை அடுத்து இந்தத் தொற்று நீக்கிகளின் தேவையும் பாவனையும் எகிறிவிட்டன. அதனால் சந்திக்குச் சந்தி, கிராமத்துக்குக் கிராமம் தொற்று நீக்கி உற்பத்தி நிலையங்கள் தோன்றிவிட்டன. அது ஒரு குடிசைக் கைத்தொழிலாகி விட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில சமூக விரோத சக்திகள் தமது கைவரிசையைக் காட்டி குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் வேலையைக் கனகச்சிதமாக முன்னெடுக்கின்றன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தொற்று நீக்கிகள் தயாரிப்பில் அதிக இலாபமீட்டுவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் கலப்பட சித்து விளையாட்டால் தொற்று நீக்கிகளின் தரம் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது என்றும், வைரஸை உடன் கொல்லும் திறனை அந்த தொற்று நீக்கிகள் இழந்து விடுவதால் அவற்றைப் பயன்படுத்தும் பொதுமக்களும் ஏமாந்து, தொற்றுக்கு இலக்காகும் ஆபத்து உருவாகியிருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இத்தகைய தொற்று நீக்கிகளின் தரம் தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் நியம அளவீடு உண்டு. அவற்றையும் கவனியாமலேயே பணம் சம்பாதிப்பதற்காக சில தரப்பினர் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

இத்தகைய தொற்று நீக்கிகள் தயாரிப்புக்கு புரொபில் அல்கஹோல் ( Propyl Alcohol) அல்லது எதனோல் (Ethanol) பயன்படுத்தப்பட வேண்டும் என்பது நியம முறை. ஆனால் பல உற்பத்தியாளர்கள் மெதனோலையே பயன்படுத்துகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

இரு நூறு கிலோ கொண்ட எதனோல் விலை சுமார் 90 ஆயிரம் ரூபா. அதற்குப் பதிலாக அதேயளவு 50 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கக் கூடிய மெதனோலை அவர்கள் பயன்படுத்துகின்றனராம்.

பெயின்ட் மற்றும் பெயின்டுக்குக் கலப்பதற்கான ரின்னர் போன்றவற்றை விற்கும் கடைகளில் இருந்து பலரும் மெதனோலைப் பெரிய தொகையாக அள்ளிச் செல்வதன் இரகசியம் இதுதான் என்று கூறப்படுகின்றது.

2020– 2021 ஆம் ஆண்டில் மட்டும் 2 கோடி 70 லட்சம் கிலோ மெதனோல் 240 கோடி ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னால் புதைந்து கிடக்கும் உண்மையும் இதுதான்.

சரியான கலவை மூலம் தயாரிக்கப்படும் தொற்று நீக்கிகளைக் காட்டி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் சபையிடம் ( NMRA) அனுமதி பெற்றுவிட்டு பின்னர் மூன்றாம் தரப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தொற்று நீக்கிகளை சந்தையில் விற்பனைக்கு விடும் தரப்புகள் குறித்தும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பேரிடர் நெருக்கடியை வசமாகப் பயன்படுத்தி, தவிச்ச முயல் அடிக்கும் இத்தகைய கயவர்கள் சரியான முறையில் – விரைந்து – சட்டத்தினால் கையாளப்பட வேண்டும்.

# விவசாயத்துடன் விளையாடாதீர்!

## அரசுக்கு வீரவன்ஸ 'அட்வைஸ்'



விவசாயத்தை அழிக்காமல், செய்த தவறை உடனடியாக திருத்திக் கொள்ள வேண்டும் என கைத்தொழில் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ நேற்றுத் தெரிவித்தார்.

விவசாயத்துடன் நாடு விளையாடக் கூடாது எனவும், விவசாயம் வீழ்ச்சியடைந்தால் உணவுப் பாதுகாப்பு வீழ்ச்சியடையும் எனவும், விவசாயப் பிரச்சினை மிகவும் உணர்திறன் மிக்க ஒன்று எனவும், உரத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் விவசாயம் வீழ்ச்சியடையும் வகையில் பதில் தேடக் கூடாது எனவும் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இயற்கை உரத்தை ஊக்குவிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் விவசாயிகளை விவசாயத்திலிருந்து துரத்துவதை அனுமதிக்க முடியாது. உணவுப் பாதுகாப்பு என்பது ஒட்டுமொத்த மக்களின் பட்டினியோடு பிணைக்கப்பட்டுள்ளமையை, உடனடியாக அதனைச் சரி செய்யாவிட்டால் நாடு பெரும் அவலத்தை சந்திக்க நேரிடும் என்றார் அவர்.

இதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை தற்போது கண்டறிந்து சரி செய்ய வேண்டும். விவசாயிகளின் போராட்டத்தால் இந்தியாவில் பிரதமர் மோடி கொண்டு வந்த இரண்டு சட்ட மூலங்கள் வாபஸ் பெறப்பட்டன. இவ்வாறான செயற்பாடு பெருமைக்குரியது. அவமானம் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

விவசாயம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்களை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும், தவறை திருத்திக் கொள்ள வெட்கப்படாமல், தவறை இன்னும் சரி என்று நினைத்துக்கொண்டு நமது விவசாயத்துடன் விளையாடுவதற்கு வெட்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

உர மானியம் வழங்குவதற்கு ஆகும் செலவை விட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அதிக செலவாகும் என்று கூறிய அமைச்சர், தற்போது விவசாயி களுக்கு இழப்பீடாக கூடுதல் தொகையை செலுத்த வேண்டியுள்ளது என்றார் அவர்.

# பஸ் பள்ளத்தில் வீழ்ந்து விபத்து ஒருவர் மரணம்; 16 பேர் காயம்!

## ஹட்டனில் இன்று காலை சம்பவம்





ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா சலங்கந்தை – ஹட்டன் பிரதான வீதியின் தரவளை பட்டல்கலை பகுதிக்கு அருகில் இன்று காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் பலியானார் 16 பேர் காயங்களுடன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சலங்கந்தை பகுதியிலிருந்து ஹட்டனில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு பயணித்த போது பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து, இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எதிரே வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றுக்கு இடம் கொடுக்க முயன்ற போதே, இந்தத் தனியார் பஸ் இவ்வாறு பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பஸ் சாரதி உட்பட 16 பேர் காயமடைந்த நிலையில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் டிக்கோயா போடைஸ் பகுதியை சேர்ந்த 62 வயதுடைய பெர்ணாண்டோ மரியசவாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# சமூகத் தொற்றாக மாறுகிறது ஓமிக்ரோன் வைரஸ் பரவல்?

கொரோனாத் தொற்றானது சமூகப் பரவலாக மாறியுள்ளது என்பதை தெளிவாகக் கூற முடியாத நிலையில், அறிகுறிகளற்ற பல தொற் றாளர்கள் சமூகத்தில் நடமாடுகின்றனர் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுகாதார சேவைகள் மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாட்டில் தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போதே சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும் விளக்கமளித்த அவர் – கொரோனாத் தொற்று எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் விசேடமாகத் தொற்று அறிகுறிகள் தென்படாதவர்கள் சமூகத்தில் பரவலாக உள்ளனர்.

கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள், தொற்று அறிகுறிகள் இன்றிய நிலையில், முழுமையான தடுப்பூசி மருந்தைப்பெற்றிருந்தால், தனிமைப்படுத்தப் பட வேண்டிய அவசியமில்லை.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளை விடா முயற்சியுடன் பின்பற்றினால், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை வழமை போன்று கொண்டாட முடியும். பூஸ்டர் தடுப்பூசி மருந்தைப் பெற்றிருந்தாலும் புதிய இயல்புநிலையில் இருந்து விலகிச் செல்ல முடியாது எனக் கூறினார்.

இதேவேளை, குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் உபுல் திஸாநாயக்க கொரோனா வைரஸானது மீண்டும் சமூகத் தொற்றாக மாறியுள்ளது எனக் கூறியுள்ளார்.

# ஆபிரிக்க நாடுகளை தாக்கிய அனா புயல்



## 70க்கும் மேற்பட்டோர் பலி!

தெற்கு ஆபிரிக்க நாடுகளை அனா எனும் வெப்ப மண்டலப் புயல் தாக்கியமையால் உண்டான மழை வெள்ளத்தால் 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தீவு நாடான மடகாஸ்கரில் குறைந்தது 48 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் தங்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேறி தற்காலிக இருப்பிடங்களில் வசித்து வருகின்றனர்.

மலாவி நாட்டில் 11 பேர் இறந்துள்ளனர். இங்கு பல இடங்கள் பேரழிவு நிகழ்ந்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மலாவியில் நாடு முழுவதும் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.

மொசாம்பிக்கில் 18 பேர் இறந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 20 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உண்மையான உயிரிழப்புகளின் எண்ணிக்கை இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இங்கு அனா புயலால் 10 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன.

# ரஷ்ய உளவாளி மீது ஜேர்மனியில் வழக்கு!



கடந்த ஆண்டு ரஷ்யாவுக்காக உளவு பார்த்தமைக்காக கைது செய்யப்பட்ட ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ரஷ்ய விஞ்ஞானி ஐரோப்பாவின் ஏரியன் விண்வெளி ரொக்கெட் திட்டம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டதாக வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

குற்றம் சாட்டப்பட்டவர் இலனூர் என். என மட்டுமே அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

2019 இலையுதிர்காலத்தில் ரஷ்ய வெளிநாட்டுபுலனாய்வுத்துறையான எஸ்.வி.ஆர் அவரைத் தொடர்பு கொண்டபோது இல்னூர் என். பவேரியன் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தார் என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

விண்வெளி தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி திட்டங்கள், குறிப்பாக ஐரோப்பிய ஏரியன், ஏரியனின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் பற்றிய தகவல்களை அவர் ரஷ்ய புலனாய்வுத்துறையினருக்கு அனுப்பினார் என குற்றம் சாட்டப்பட்டார்.

ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சியின் ஏரியன் திட்டம், செயற்கைக்கோள்கள் உட்பட அதிக சுமைகளை விண்வெளிக்கு கொண்டுசெல்ல வடிவமைக்கப்பட்ட போக்குவரத்து ராக்கெட்டுகளின் வரிசையைக் கொண்டுள்ளது.

வழக்குரைஞர்களின் கூற்றுப்படி, இல்னூர் என். 2019 நவம்பர் பிற்பகுதியிலிருந்து ஜேர்மனியில் நிலைகொண்டுள்ள ரஷ்யாவின் வெளிநாட்டு உளவுத்துறையின் மூத்த அதிகாரியுடன் வழக்கமான சந்திப்புகளை நடத்தினார் எனத் தெரிவித்தனர்.

அவர் பகிர்ந்த தகவலுக்கு ஈடாக அவர் 2,500 யூரோக்கள் ரொக்கமாகப் பெற்றார் எனக் கூறப்படுகிறது. அதில் பெயரிடப்படாத பவேரியன் பல்கலைக்கழகத்தில் அவரது அறிவியல் ஆராய்ச்சி பற்றிய விவரங்களும் அடங்கும்.

மாஸ்கோவிற்கு உளவு பார்த்த சந்தேகத்தின் பேரில் கடந்த ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார் இலனூர் என்.

அவர் பல்கலைக்கழகத்தின் இயற்கை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றினார் என வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

மொஸ்கோ உக்ரைனை ஆக்கிரமிக்க திட்டமிட்டுள்ளதாக மேற்குலகம் அஞ்சுவதால், ஜேர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பதற்றங்கள் அதிகரித்துள்ள நேரத்தில் இந்த வழக்கு வந்துள்ளது.

ஜேர்மனி தனது மண்ணில் ரஷ்ய உளவு பார்த்ததாக சந்தேகிக்கப்படும் வழக்குகள் சமீபத்தில் நடந்துள்ளன.

ஒக்டோபர் 2021 இல், ஒரு செக்யூரிட்டி நிறுவனத்தில் பணிபுரியும் போது, நாடாளுமன்ற கட்டடங்களின் தரைத் திட்டங்களை ரஷ்ய இரகசிய சேவைகளுக்கு அனுப்பியதற்காக ஒரு ஜேர்மன் நபருக்கு இரண்டு ஆண்டுகள் இடைநீக்கம் செய்யப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆகஸ்ட் மாதம், பெர்லினில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் ரஷ்ய உளவுத்துறைக்கு ஆவணங்களை அனுப்பிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

ஜேர்மனியை இணைய உளவு பார்த்ததாக பலமுறை ரஷ்யாவை குற்றம் சாட்டியுள்ளது.



# பாகிஸ்தான் - ஆப்கான் இடையேயோன வர்த்தகம் பெருமளவில் குறைகின்றது

ஆப்கானிஸ்தான் வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சபை வழங்கிய தரவுகளுக்கு அமைவாக, ஆப்கானிஸ்தான் மற்றும் மூன்று மத்திய ஆசிய குடியரசுகளான தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவற்றுக்கு இடையேயான வர்த்தகத்தின் அளவு நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளது.

அத்துடன், இந்த ஆண்டு ஆப்கானிஸ்தான் மத்திய ஆசியாவிற்கு 33 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளதோடு இறக்குமதியானது 2 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது.

இந்த ஆண்டு மத்திய ஆசியாவில் இருந்து எங்களின் இறக்குமதிகள் 2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாகியுள்ளது என வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சபையின் தலைவர் முகமது யூனுஸ் முகமண்ட் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டில் ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய வர்த்தகத்தின் அளவு பற்றிய சரியான புள்ளிவிவரத்தை அதிகாரிகள் வழங்கவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் கூட்டு வர்த்தக சபை அதிகாரிகள் கூறுகையில், இந்த ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக அளவு 26 சதவீதம் குறைந்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, துறைமுகங்களில் பொருள்கள், சேவைகளின் போக்குவரத்தில் சிக்கல்கள் உள்ளன.

இரண்டாவதாக, பாகிஸ்தானின் வங்கிகளின் ஊடான வர்த்தகத்தில் தொடர்ச்சியாக விதிக்கப்பட்டு வரும் வரையறைகள் ஆப்கானிஸ்தானுக்கான பொருள்களின் இறக்குமதியில் குறைவுக்கு வழிவகுத்துள்ளது.

இந்த இரண்டு காரணங்களையும் பாகிஸ்தான் வர்த்தக சபையின் தலைவர் நகிபுல்லா சாஃபி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், மத்திய ஆசியா - தெற்காசியா வர்த்தகம் மற்றும் போக்குவரத்தின் காரணமாக, தலிபான் சுங்கவரிகளின் வருவாய் அதிகரித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டு ஆப்கானிஸ்தானின் இறக்குமதி அளவு வேலையின்மை, வறுமை மற்றும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக குறைந்துள்ளதாகவும் ஆப்கான் வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சபையின் மேலும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டோங்கோவின் பங்காய்க்கு வடமேற்கில் நிலநடுக்கம்!

டோங்கோவின் பங்காய்க்கு வடமேற்கில் 219 கிலோமீற்றர் தொலைவில் 6.2 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி 170 இற்கும் மேற்பட்ட தென் பசிபிக் தீவுகளை உள்ளடக்கிய ஓசியானியாவிலுள்ள ஒரு சிறிய நாடான டோங்கோ அருகே கடலுக்கடியில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டது.

இந்த வெடிப்பினால் அமெரிக்காவின் மேற்கு கடற்கரை, ஹவாய் மற்றும் அலாஸ்காவின் பெரும்பகுதிக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இது 20 கிலோமீற்றர் உயரத்திற்கு பெரிய சாம்பல் மேகங்களை ஏற்படுத்தியதுடன், தொலைதூர பகுதிகளில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையை பாதித்திருந்தது.

அதேநேரம் டோங்கோவில் சுனாமி அலைகளும் ஏற்பட்டிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

# மற்றுமொரு ஏவுகணையினை பரிசோதனை செய்தது வட கொரியா!

வட கொரியா, கிழக்குக் கடலில் அடையாளம் தெரியாத ஏவுகணையைச் சோதனை செய்துள்ளது என தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த ஆண்டு வட கொரியா ஆறாவது முறையாக ஏவுகணைச் சோதனையை முன்னெடுத்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேச்சுக்கு வருமாறு அமெரிக்கா விடுத்த அழைப்பை புறக்கணித்த வட கொரியா, தொடர்ந்து தனது இராணுவ வலிமையைப் பறைசாற்றி வருகின்றது.

கடந்த 5ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் இரண்டு ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளையும், 14ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் சந்தேகத்திற்கிடமான பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையையும் நடத்தியது என தென் கொரியா அறிவித்தது.



கிழக்கு கடற்கரையிலுள்ள ஹம்ஹங் வழியாக, தனது அண்டை நாடான வடகொரியா, இரண்டு சந்தேகத்திற்கிடமான பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியது என தென் கொரியா குறிப்பிட்டது.

# இந்தியாவுக்கு ரஷ்ய ஏவுகணைகளா? மீண்டும் எச்சரிக்கின்றது அமெரிக்கா



வொஷிங்டன்,ஜன.29

இந்தியாவுக்கு 'எஸ் - 400' ஏவுகணை வழங்கி, ஆசிய பிராந்தியத்தில் ஸ்திரமற்ற சூழலை உருவாக்க ரஷ்யா முயற்சிப்பதாக அமெரிக்கா மீண்டும் எச்சரித்துள்ளது.

கடந்த, 2018 ஒக்டோபரில் ரஷ்யாவிடம் இருந்து ஐந்து 'எஸ் - 400' ஏவுகணைச் சாதனங்களை, 38 ஆயிரம் கோடி ரூபாய்க்கு வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்தது.தரையில் இருந்து கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் இந்த நவீன ஏவுகணைகளை இந்தியா வாங்குவதற்கு, அப்போது அமெரிக்க அதிபராக இருந்த டொனால்ட் டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

மேலும், ஏவுகணைகளை வாங்கினால், இந்தியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் எனவும் எச்சரித்தார். ஆனால் இதற்கு அஞ்சாத இந்தியா, 'நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை' எனக் கூறி, திட்டமிட்டபடி ரஷ்யாவிடம் ஏவுகணை வாங்கப்படும் என தெரிவித்து விட்டது.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் நெட் பிரைஸ் கூறியதாவது:-இந்தியா, ரஷ்யாவிடம் 'எஸ் - 400' ஏவுகணை சாதனம் வாங்குவது குறித்த அமெரிக்காவின் கவலை நீடிக்கிறது. பொருளாதார தடை ரஷ்யா, ஆசிய பிராந்தியத்தில் மட்டுமின்றி அதை தாண்டியும் ஸ்திர மற்ற சூழலை உருவாக்க முயற்சிக்கிறது.

இதற்கு, இந்தியாவின் எஸ் - 400 ஏவுகணை ஒப்பந்தம் வலு சேர்க்கும். ரஷ்யாவிடம் ஏவுகணை வாங்குவதால் இந்தியா மீது பொருளாதார தடை விதிக்கும் முடிவை அமெரிக்கா இன்னும் எடுக்கவில்லை. இது தொடர்பாக இந்தியாவுடன் தொடர்ந்து பேசி வருகிறோம். - இவ்வாறு அவர் கூறினார்.

## முன்னாள் முதல்வர் எடியூரப்பாவின் பேத்தி தூக்கிட்டுத் தற்கொலை

பெங்களூரு,ஜன.29

எடியூரப்பா பேத்தி அடுக்கு மாடி குடியிருப்பில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கர்நாடக மாநிலம் பாரதிய ஜனதா கட்சியின் தலைவரும் கர்நாடக முன்னாள் முதல்வருமான பி.எஸ் .எடியூரப்பாவின் மூத்த மகள் பத்மாவதி. இவரது மகள் சவுந்தர்யா (வயது 30). இவர் ஒரு பயிற்சி வைத்திய சாலைக்கு ஆவார். இவரின் கணவர் மீரஜும் வைத்தியராவார்.

இவர்கள் பெங்களூருவில் உள்ள வசந்தநகர் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தனர். இந்த நிலையில் நேற்றுக் காலை சவுந்தர்யாவின் வீட்டுக்கு வேலை செய்யும் பணிப் பெண் சென்றுள்ளார்.

கதவை திறக்க கூறி வெகு நேரம்தட்டிஉள்ளார். ஆனால், கதவு திறக்கவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த பணிப் பெண் சவுந்தர்யாவின் கணவர் மீரஜிக்கு தகவல் கொடுத்துள்ளார். விரைந்த வந்த மீரஜ் சந்தேகம் அடைந்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

விரைந்து வந்த பொலிஸார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது சவுந்தர்யா மின் விசிறியில் தூக்கு போட்டுக்கொண்ட நிலையில் பிணமாக கிடந்தார்.



பொலிஸார் உடலை பிரேத பரிசோதனைக்காக பவுரிங் வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்கள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இது குறித்து தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த கர்நாடக உள்துறை அமைச்சர் அரகா தியானேந்திரா கூறியதாவது:-

எந்த சந்தேகமும் இல்லை. கர்ப்பத்திற்குப் பிறகு சவுந்தர்யா மன அழுத்தத்துடன் போராடிக்கொண்டிருந்தார் என்பதை நாங்கள் அனைவரும் அறிவோம். அவர் மகிழ்ச்சியாக இருப்பதை உறுதி செய்வதற்காக எடியூரப்பா அடிக்கடி தனது வீட்டிற்கு அழைத்து வருவார். தனது பேத்தி மரணத்தால் எடியூரப்பா மிகவும் வருத்தமடைந்துள்ளார். - என்று கூறி

## இந்தியா – பாக். பிரிப்பின்போது பிரிந்த சகோதரர்கள் 74 ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்ப சந்திக்கவுள்ளனர்

டில்லி,ஜன.28

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது பிரிந்த இஸ்லாமிய சகோதரர்கள் 74 ஆண்டுகளுக்குப் பிறகு சந்திப்பதற்கு இந்திய மத்திய அரசின் தீவிர முயற்சியால் பாகிஸ்தான் உயர் கமின் அனுமதி வழங்கி உள்ளது.



கர்தார்பூர் சாஹிப் சதுக்கத்தில் எழுபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது சிறுவர்களாகப் பிரிந்த இரண்டு இஸ்லாமிய சகோதரர்கள் தற்போது பாகிஸ்தான் உயர் கமின் மற்றும் இந்திய அரசின் அனுமதி காரணமாக சந்திக்க உள்ளனர். இந்தியா விடுதலை பெற்ற 1947ஆம் ஆண்டு முகமது அலி ஜின்னா தலைமையில் பிரிவினை வாதிகள் இஸ்லாமியர்களுக்கு வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானைத் தனி நாடாக அறிவிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்நேரத்தில் இஸ்லாமியர்களுக்கு மட்டும் இரண்டு வாய்ப்புகள் தரப்பட்டன. ஒருநாடாக அப்போது அமைந்த பாகிஸ்தான், வங்கதேசம் ஆகியவற்றுக்குச் செல்ல விரும்பும் இஸ்லாமியர்கள் தங்களது உடைமைகளை எடுத்துக் கொண்டு இந்த இரண்டிலும் குடியேறலாம் என்றும், இந்தியாவிலேயே தங்க விரும்பும் இஸ்லாமியர்கள் இங்கேயே இருக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்நேரத்தில் பாகிஸ்தானுக்குச் செல்ல விரும்பிய இஸ்லாமியர்கள் பலர் தங்கள் நிலங்கள், வீடுகளை விற்றுவிட்டு உடைமைகளுடன் எல்லை தாண்டிச் சென்றனர்.

இவர்களில் குழந்தைகள், பெண்கள் ஆகியோரும் அடக்கம். இதுபோன்ற பிரிவினை நிறைந்த காலகட்டத்தில் பல சகோதர, சகோதரிகள் பிரியும் அவலநிலை ஏற்பட்டது. இதேபோல சிகா கான், முகமது சித்திக் ஆகிய இரு சகோதரர்களும் 1947ஆம் ஆண்டு பிரிந்தனர்.

இந்தியாவில் தங்கிவிட்ட சிகா கான் திருமணமாகி, குழந்தைகள் பெற்று, வயதாகி பேரப்பிள்ளைகளுடன் வசித்து வந்த நிலையில் அவரது சகோதரர் முகமது சித்திக் மற்றும் குடும்பத்தினர் பாகிஸ்தானில் எங்கு இருக்கிறார்கள் என்று சிகா கானுக்கு தெரியவில்லை.

சமீபத்தில் அவர் பாகிஸ்தானில் இருக்கும் இடம் கண்டறியப்பட்ட நிலையில் அவரை சந்திக்க சிகா கான் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை பாகிஸ்தான் உயர் கமினிடம் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக சிகா கான் தனது சகோதரர் முகமது சித்திக்கை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டது. இதனை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பாகிஸ்தான் உயர் கமின் உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு இணையத்தில் பலர் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது.

## மதுரையில் தம் மகனை உயிருடன் எரித்து கொன்ற பெற்றோர் கைது!

### காட்டிக்கொடுத்த கண்காணிப்பு கமரா

மதுரை, ஜன.29

மதுரையில் குடிபோதையில் தகராறு செய்த மகனைப் பெற்றோர் அடித்து மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக்கொலை செய்தனர். மகன் உடலை சைக்கிளில் கொண்டு சென்றமை கண்காணிப்பு கமராவில் பதிவானமை மூலம் உண்மை அம்பலமாகியது.

ஆரப்பாளையம் அருகே வைகையாற்றுக்குள் பாதி எரிந்த நிலையில் இளைஞர் உடல் கிடந்தது. கரிமேடு பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று உடலை மீட்டு அரசு வைத்தியசாலைக்கு அனுப்பினர்.

விசாரணையில் இறந்தவர் ஆரப்பாளையத்தை சேர்ந்த மணிமாறன் (வயது 45) எனத் தெரிய வந்தது. அப்பகுதி கண்காணிப்பு காமிராக்களை ஆய்வு செய்தபோது மணிமாறனின் பெற்றோர் முருகேசன் (வயது 75), கிருஷ்ணவேணி (வயது65) ஒரு உடலை சாக்கில் வைத்துக் கட்டி, ரத்தம் சொட்டச் சொட்ட சைக்கிள் பின்புறத்தில் வைத்துத் தூக்கிச் சென்றமை தெரிந்தது. இவ்விடயம் தொடர்பில் பொலிஸார் கூறியவை வருமாறு:-

மணிமாறனுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். கருத்து வேறுபாடால் மனைவியைப் பிரிந்து பெற்றோர் வீட்டில் வசித்தார். தினமும் குடித்து விட்டு பெற்றோரிடம் தகராறு செய்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு போதையில் இருந்த அவர் பெற்றோருடன் வாக்குவாதம் செய்தார். ஆத்திரத்தில் விறகு கட்டையால் முருகேசன் அடித்ததில் மணிமாறன் மயங்கி விழுந்தார். பின் அவர் மனைவியுடன் மகன் உடலை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு காமராஜர் மேம்பாலம் அருகே வைகை ஆற்றுக்குள் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துள்ளார்.



அவர்களிடம் விசாரணை நடக்கிறது. கணவனும், மனைவியும் சைக்கிளில் உடலை கொண்டு சென்றமை தொடர்பாக அப்பகுதி கண்காணிப்பு கமரா பதிவு ஒன்று கிடைத்துள்ளது. - என்றனர்.

# சிறந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினராக கிழக்கின் இரா.சாணக்கியன் தெரிவாகினார்




2021ஆம் ஆண்டுக்கான சிறந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினருக்கான விருது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Institute of Politics என்ற அமைப்பினால் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் குறித்த விருது இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புகள் மற்றும் வேறு சில முக்கிய காரணங்களினால் இரா.சாணக்கியன் குறித்த நிகழ்வில் பங்கேற்றிருக்கவில்லை என அவரது ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் கடந்த வாரம் Institute of Politics என்ற அமைப்பின் அலுவலகத்தில் வைத்து இரா.சாணக்கியனுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

## 5 பிள்ளைகளின் தந்தை விபத்தில் உயிரிழப்பு

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான செல்லப்பா சண்முகம் என்ற 75 வயதுடையவர் நேற்று மாலை விபத்தில் பலியாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்துமரண வீடொன்றிக்கு சென்று திரும்பியவேளை மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ஆடை தொழிச்சாலையில் பணிபுரியும் நபர்களை ஏற்றிக் கொண்டு சென்ற வேன் மோதியதில் வயோதிபர் சம்ப இடத்தில் பலியாகியுள்ளார்எனபொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். சந்திவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## காணிக்கை மாதா கொடியேற்றத் திருவிழா

கிழக்கிலங்கையில் தொன்மை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயங்களிலொன்றான மட்டக்களப்பு தாண்டவன் வெளி காணிக்கை மாதா கொடியேற்றத் திருவிழா நேற்று மாலை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயப் பங்குதந்தை ஏ.ஸ்ரனிஸ்லோஸ் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

தேவாலயத்தின் காணிக்கைமாதா திருவுருவச் சொருபம் ஆலயப் பங்குத் தந்தையினால் கொடியேற்றக் கம்பத்திற்கருகில் கொண்டுவரப்பட்டு ஆலயப்பங்கு மக்கள் சுகாதார நடைமுறைகளை விழிப்பாக முன்னெடுக்க வேண்டுமென கருத்துரை வழங்கப்பட்ட பின்பு விசேட வழிபாடுகளின்பின் ஆலய பங்கு மக்களினால் திருவிழாக் கொடிகள் மலர்தூவி ஆலய மணி ஒலிக்கப்பட்டு அடியார்களின் கரகோசத்துடன் கொடியேற்றத் திருவிழா இடம்பெற்றது.

## கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வி.கனகசிங்கத்திற்குக் மதிப்பளிப்பு



கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய உப வேந்தராக பதவியேற்ற பேராசிரியர் வி.கனகசிங்கத்தை மட்டக்களப்பு சிவில் சமூகத்தினர் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் தலைவர் எஸ். மாமாங்கராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புதிய உபவேந்தரைப் பற்றிய சிறப்புரையை பேராசிரியர் எஸ். மௌனகுரு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வி.விவேகானந்த ராஜா, சிவில் சமூகத்தின் செயலாளர் அன்ரன் தம்பி முத்து, கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ. பகிரதன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அத்தோடு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவம், விஞ்ஞானம், விவசாயம், வணிக முகாமைத்துவம் மற்றும் கலை கலாசார பீடங்களின் பீடாதிபதிகள் பிரசன்னமாகி இருந்தனர். புதிய உபவேந்தர் பேராசிரியர் வி.கனகசிங்கத்தினால் அண்மையில் எழுதப்பட்ட 3 நூல்களை மட்டக்களப்பு சிவில் சமூகம் வெளியிட்டு வைத்ததோடு அவர் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 10 ஆவது உபவேந்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாமாங்கத்தில் கடை முற்றாக எரிந்து நாசம்



மட்டக்களப்பு மாமாங்கம் 3 ஆம் குறுக்கு வீதியில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை வியாபார நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது. இதனால் வியாபார நிலையத்திற்குள் இருந்த அனைத்து பொருள்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

எரிவாயு கசிவு காரணமாக இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

## திருகோணமலையில் பாரம்பரிய பொங்கல்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் பாரம்பரிய முறைப்படி தைப்பொங்கல் விழா நிகழ்வுகள் நேற்று பட்டனமும் சூழலும் பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் மக்களுடைய முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாக தைப் பொங்கல் நிகழ்வு காணப்படுவதுடன் சம்பிரதாய முறைகளை பின்பற்றி தைப்பொங்கல் விழா நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது போல் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வாக தைப்பொங்கல் நிகழ்வு அமைகின்றது.

இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவது உத்தியோகத்தர்களிடையே சமயங்கள் தொடர்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஏதுவாக அமையும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோ கத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சிறையிலிருக்கும் ரஞ்சன் ராமநாயக்காவுக்கு சுதந்திர தினத்தன்று சுதந்திரம் கிடைக்கும்?

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறையில் வாடும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க எதிர்வரும் 4 ஆம் திகதி சுதந்திர தினத்தின் போது ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலையாகலாம் என எதிர்வு கூறபட்டுகின்றது.

இது தொடர்பாக நடிகர் கமல் ஹத்தர ஆராச்சி உட்பட சிங்கள திரைப்பட கலைஞர்கள் இணைந்து அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

அதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமான செல்வந்த வர்த்தகர் நிஸ்ஸங்க சேனாதிபதியும் கலந்துக்கொண்டார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. ரஞ்சன் ராமநாயக்க மூன்று நிபந்தனைகளின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

முதலாவது– விடுதலையானதும் ஹரின் பெர்னாண்டோவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர் பெற்றுக்கொள்வது.

ரஞ்சன் ராமநாயக்க விடுதலையாகி வந்தால், தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகி, அந்த பதவியை ரஞ்சன்ராமநாயக்கவுக்கு பரிசளிக்கபோவதாக ஹரின் பெர்னாண்டோ இதற்கு முன்னர் பல முறை கூறியிருந்தார். அரசாங்கத்திற்கு சவாலாக அவர் இதனை வெளியிட்டிருந்தார்.

இதனால், ரஞ்சன் ராமநாயக்க, பொது மன்னிப்பின் கீழ் விடுதலையானால், ஹரின் பெர்னாண்டோ கட்டாயம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக நேரிடும். அப்போது அதனை நிராகரிக்காது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது ரஞ்சனுக்கு விதிக்கப்பட்டுள்ள முதல் நிபந்தனை. ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்திற்குள் ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக பலமாகக் குரல் கொடுத்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர். அவரது தகவல் வெளியீடுகள் நீண்டகாலமாக அரசாங்கத்திற்கு தலைவலியாக இருந்து வருகின்றன என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இதனால், ரஞ்சன் விடுதலையான பின்னர், ஹரின் பெர்னாண்டோவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக செய்வது அரசாங்கத் தரப்பில் பெரும் வெற்றியாக அமையும். நாடாளுமன்ற சிறப்புரிமைகளின் கீழ் நாடாளுமன்ற அவையில் கூறும் கதைகளை அவருக்கு வெளியில் கூற முடியாத சட்ட நிலைமைகள் இருப்பதே இதற்கு காரணம்.

ரஞ்சன் ராமநாயக்க, ஹரின் பெர்னாண்டோவின் நாடாளுமன்ற ஆசனத்தை பெற்று நாடாளுமன்றத்திற்குள் வந்தாலும் ஹரின் செய்த வேலைகளை செய்யக் கூடாது என்பது இரண்டாவது நிபந்தனை.

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எதிராக பெரும் சவாலை முன்வைத்து ஹரின் பெர்னாண்டோ தொடர்ந்தும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லக் கூடாது. இதன் மூலம் நாடாளுமன்றத்திற்குள் ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு இருந்த மிகப் பெரிய சவால் முற்றாக இல்லாமல் போய்விடும்.



நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தற்போது நீதிமன்றத்தில் நடந்து வரும் மற்றைய வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்றத்தில் அவர் மன்னிப்பு கோர வேண்டும் என்பது மூன்றாவது நிபந்தனை. ரஞ்சன் ராமநாயக்க, முதலாவது வழக்கில் குற்ற வாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு சிறைக்கு செல்லும் போது, எனது கண்களில் அச்சம் என்பது துளிகூட இருக்கின்றதா தம்பி? எனக் கூறி ஒரு வீரனை போல் சென்றார். அவர் சிறையில் அடைக்கப்பட்ட விதம் அவருக்கு மிகப் பெரிய வீரன் என்ற தோற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இரண்டாவது வழக்கில் மன்னிப்பு கோருவதன் மூலம் அந்த வீரத்துவம் முற்றாக இல்லாமல் போய் விடும். இதன் பின்னர் அவருக்கு எஞ்ச போவது வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மாத்திரமே என அரச தரப்பு கணக்கிடுகின்றதாம். இதனடிப்படையில் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதன் ஊடாக அரசாங்கம் ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை பறிக்க உள்ளது என அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## அம்புலன்ஸ் சாரதியை தாக்கிய வைத்தியர்

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரை வைத்தியசாலைக்கு அழைத்து வந்த சுவாசரிய அம்புலன்ஸ் சேவையின் சாரதி ஒருவரை கெக்கிராவ வைத்தியசாலையின் வைத்தியரும் சிற்றூழியர் ஒருவரும் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து கெக்கிராவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர் எனக் கூறப்படும் அம்புலன்ஸ் சாரதி தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## 95 சதவீதமானோருக்கு ஒமிக்ரோன் தொற்று!

இலங்கையில் தற்போது பதிவாகும் கொவிட் தொற்றாளர்களில் 95 சதவீதமானவர்கள் ஒமிக்ரோன் மாறுபாட்டு வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் பட்டு வந்துட்டாவ இதனைத் தெரிவித் துள்ளார்.

ஆய்வகங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்க மனோ வலியுறுத்து

### வெளிநாட்டு அழுத்தத்தினால்தான் அதைத் திருத்த முயற்சி



கொழும்பு,ஜன.29

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீளத் திருத்துவதற்கான வர்த்தமானி பிரகடனம் வெளியாகியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நெருக்கடி, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைத் தக்க வைக்கும் எத்தனம் ஆகியவற்றை நோக்கி, அரசு சார்பாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இதை வேறு வழியில்லாமல் அறிவித்துள்ளார். எனினும் இதுவும் ஒரு முன்னேற்றம் தான். ஆனால், இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற எமது குரலை நாம் நிறுத்திவிடக் கூடாது.

"அதேவேளை, 'உள்நாட்டில் எம்முடன் பேசுங்கள். இந்தியா, அமெரிக்கா, ஐ.நா. என வெளி சக்திகளுடன் பேசாதீர்கள்' என எமக்கு வகுப்பு எடுத்து அறிவுரை கூறுபவர்களுக்கும், இலங்கை அரசியலை இன்னமும் சரியாக புரிந்துகொள்ளாத அரசியல் குழந்தைகளுக்கும் இது சமர்ப்பணம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

வெளிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இலங்கை வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து, பயங்கரவாத தடை சட்ட திருத்தங்கள் பற்றி அறிவித்துள்ளமை மற்றும் இது பற்றிய வர்த்தமானி வெளியாகியுள்ளமை தொடர்புகளில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

என்னை பொறுத்தவரையில், திருத்தம் அல்ல, இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதற்கான காலம் இன்று கனிந்து விட்டது என நினைக்கிறேன். அவசர நிலைமைகளுக்கு சாதாரண சட்டங்களே போதும். அதி அவசரம் ஏற்படுமானால், சடுதியாக இந்த சட்டத்தை மீள உடன் கொண்டும் வரலாம். ஒரே நாளில் அரசமைப்புத் திருத்தங்களையே கொண்டு வந்தவர்களுக்கு இது பெரிதல்ல.

ஆனால், இன்று சட்ட புத்தகங்களில் இருந்து இச்சட்டம் முழுமையாக அகற்றப்படுவது அவசியம். ஏனெனில் போர் முடிந்த பத்து ஆண்டுகள் ஆன பிறகும் அமுலில் இருக்கும் இச்சட்டம் ஏற்கனவே கணிசமான துன்புறுத்தல்களை தந்து கொண்டு தான் இருக்கிறது. குறிப்பாக தமிழ் பேசும் மக்களை நோக்கி இது பாய்கிறது.

ஆனால், இதில் நடப்பு ராஜபக்ஷ அரசை மட்டும் குறை கூற முடியாது. இந்த அரசு மட்டுமல்ல, எந்த இலங்கை அரசும் முழுமையாக இச்சட்டத்தை நீக்க முன்வரவில்லை. இந்த சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள் சிலரே இச்சட்டம் முழுமையாக நீக்க கூடாது எனக் கொடி பிடிக்கிறார்கள்.

எனினும், அரசுக்கு அரசு இச்சட்டம் அமுல் செய்வதில் வேறுபாடு உண்டு. எமது நல்லாட்சியில் அது அப்பட்டமாக தெரிந்தது. எமது ஆட்சியின் போது இந்த சட்டம் கவனமாகத்தான் பயன்படுத்தபட்டது. எமது அரசு காலத்தில், இது தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்களில் நான், தேசிய ஒருமைப்பாடு அமைச்சராக கலந்துக் கொண்டுள்ளேன்.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடை சட்டம் மீளத் திருத்தப்படுகிறது என்ற வெளிவிவகார அமைச்சரால், ஜனவரி 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானிப் பிரகடனம், எமக்கு ஓர் அடிப்படை உண்மையை மீளவும் எடுத்து உரைக்கிறது.

ஐ.நாவோ, அமெரிக்காவோ, ஐரோப்பிய யூனியனோ, இந்தியாவோ, ஏதாவது வெளி சக்திகள் சொன்னால்தான் இந்த அரசு கொஞ்சமாவது நகருகிறது. இதுதான் இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

'உள்நாட்டில் எம்முடன் பேசுங்கள். இந்தியா, அமெரிக்கா, ஐ.நா. என வெளிச்சக்திகளுடன் பேசாதீர்கள்' என எமக்கு வகுப்பு எடுத்து அறிவுரை கூறுபவர்களுக்கும், இலங்கை அரசியலை இன்னமும் சரியாக புரிந்துகொள்ளாத அரசியல் குழந்தைகளுக்கும் இது சமர்ப்பணம்.- என்றார் அவர்.

## மூன்றரைக் கோடி தடுப்பூசிகள் 1 வருடத்தில் செலுத்தப்பட்டன

இதுவரை இலங்கையில் 3 கோடி 56 லட்சத்து 34 ஆயிரத்து 497 கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜய சுமன தெரிவித்துள்ளார்.

இதன்படி சினோபார்ம் – 2 கோடி 30 லட்சத்து 29 ஆயி ரத்து 353 பேருக்கும், பைசர் – 77லட்சத்து 98 ஆயிரத்து 598 பேருக்கும், மொடர்னா – 15 லட்சத்து 92 ஆயிரத்து 162 பேருக்கும், அஸ்ட்ராசெனிகா 28 லட்சத்து 99 ஆயிரத்து 460 பேருக்கும், ஸ்புட்னிக் வி – 3லட்சத்து 14 ஆயிரத்து 924 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஏற்றும் பணி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய அரசு அமைப்பதற்கு முயல்கிறதாம் ஐ.தே.கட்சி!

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளது என அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்தை மகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்–

தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும், தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகிறது. இதனால் ஏனைய கட்சிகளுடன் பரந்த அடிப்படையிலான பேச்சுக்களை நடத்த நாம் தயாராக உள்ளோம். நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்கும் வகையில், ஐக்கிய தேசியக் கட்சி தனது கொள்கை அறிக்கையை தயாரிப்பதில் கவனம் செலுத்தும். இது குறித்து ஏனைய கட்சிகளினதும் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும், ஏனெனில் ஆளும் தரப்பினர் தமது பங்காளிக் கட்சியை கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2022இல் வெளியிடப்பெற்றது.